திரு. எம். எஸ். செல்வராஜன் : சார், பல காலம் பணி செய்தவர்களுக்குச் சிரமங்கள் இருப்பதால், அவர்கள் விஷயத்தில் ஒரு முடிவு இருக்கும்போது, அவர்கள் ஆரம்பத்தில் பணி தொடங்கிய காலத்திலிருந்தே ஊதிய உயர்வைக் கொடுக்க, ரெகுலரைஸேஷன் செய்ய, வழி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்பொழுது அதைச் சொல்ல முடியாது. பரிசீலனையில் இருக்கும்போது, முடிவைப் பற்றி எப்படிச் சொல்வது ?

புவியியல் ஆராய்ச்சி

* 360 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லாவில் பல பகுதிகளிலும், திருச் செந்தூர் தாலுகாவில் குதிரைமொழித்தேரியிலும் அரசாங்கம் பூகர்ப்ப ஆராய்ச்சி ஏதேனும் மேற்கொண்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : குதிரைமொழித்தேரி பகுதியில் சராசரி 50 அடி முதல் 75 அடி கனத்திற்கு செந்நிற மணல் . . . [illegible]

Sir, I shall read the answer in English because it contains technical terms.

(a) & (b) : Yes, Sir. In Kuthiraimozhitheri area, the teri sands occur with an average thickness of 50 to 75 feet and are underlain by Penambarai Sand-stones and limestones. The whole of Kuthiraimozhitheri is in the Reserve Forest. The investigation of these sands in coastal parts of Tirunelveli district has been suggested to the Geological Survey of India for inclusion in the field season programme for 1966–67. The important minerals occurring in other parts of Tirunelveli district are crystalline
9-00 a.m. limestone, coral limestone, Tuffaceous limestone, kankar, ilmenite monozite and garnet sands.

திரு. எம். எஸ். செல்வராஜன் : முழு ஆராய்ச்சியின் முடிவு தெரிந்து அத்தகைய மணலையெல்லாம் பயன்படுத்துகிற காலத்திற்கு மத்தியில் அதில் இருக்கும் வண்ண வண்ணமான மணலை யெல்லாம் தற்காலிகமாகத் தொழில்களுக்கு உபயோகப்படுத்துவது பற்றி அரசாங்கம் ஆலோசனை செய்திருக்கிறதா ? அல்லது ஆலோசனை செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதை எப்படி உபயோகப் படுத்த முடியும் என்பது இப்பொழுது தெரியவில்லை. பரிசீலனை செய்த பிறகுதான் பார்க்க வேண்டும்.